
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1021

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

37

படங்கள் உதவி : ஞானம்



திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# அவன் பித்தனா? கொள்கைச் சிங்கம், அஞ்சாத லட்சியத் தங்கம்!

அவன் பித்தனா ? படத்தின் தொடக்கக் காட்சியிலேயே கொள்கை முழக்கமிட்ட கலைஞர், பிறகு படம் முழுதும் வாய்ப்புக் கிடைத்த இடத்தில் எல்லாம் வசனங்களுக் கிடையே திராவிட இயக்கக் கொள்கை வெடி மருந்துகளைத் தூவிச் செல்கிறார்.

படம் பார்க்கும் பார்வையாளர் மூளைக்குள், அவை சிந்தனையைத் தூண்டுகின்றன. அவர்களின் நெஞ்சத்தில் மனிதத்தை ஊற்றெடுக்கச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக அழகிரி டீ கடையில் ஒரு காட்சி....

மில் தொழிலாளி: என்னப்பா குமாரு, ஒரு டீ கொடப்பா.

குமார் : ஏன்? இட்லி தோசை வடை எல்லாம் இருக்கு சாப்பிடுங்களேன்.

தொழிலாளி: இங்க இட்லி இருக்கு. தோசை இருக்கு, என்ன பன்றது? எங்க மில்லு மொதலாளிக்கு இருதயம் இல்லையே?

குமார்: அவர நல்லவருன்னு எல்லாரும் பேசிக்கிறாங்களே ?

தொழிலாளி: நல்லவருதான். ஆனா நான் இன்னும் அவரைப் பார்த்தது இல்லையே

குமார்: என்னது? மொதலாளியைத் தொழிலாளி பார்த்ததே இல்லையா?

என்று தொடங்கும் உரையாடலில்... குமார் அந்தத் தொழிலாளிக்கு “இந்தாங்க வயிறு நிறையச் சாப்பிடுங்க” என உணவு அளிப்பதுடன், அதற்கான பணம் இல்லையென்றால், அடுத்தமாதம் வாங்கிக் கொள்கிறேன்” என அனுப்பி வைப்பார்.

அதே டீ கடையில் வாடிக்கையாளர் ஒருவர்: ‘குமாரு அண்ணே வடை ரொம்ப எளைச்சுப் போச்சண்ணே’ என்று கேட்கிறார். அதற்கு

குமார்: ’விலைவாசி உயர்வை நினைச்சு நினைச்சுக் கவலைப் பட்டு வடை தோசை இட்லி எல்லாம் எளைச்சுப் போச்சு.’ என அன்றைய ஆட்சியின் மீதான விமர்சனத்தைப் போகிற போக்கில் எழுதி இருப்பார்.

நல்லையா தனது இரும்புப் பெட்டிச் சாவியை கோமதியிடம் கொடுத்ததைக் கொண்டு வந்து குமாரிடம் காட்டுகிறாள். அப்போது குமாருக்கும் கோமதிக்கும் நடக்கும் உரையாடல்...

குமார்: இரும்புப் பெட்டிச் சாவி! இரும்புப் பெட்டிச் சாவியை எடுத்து உன் கையில கொடுத்துட்டா அதுல இருக்கிறதை எல்லாம் எடுத்துத் தொழிலாளிகளுக்குக் கொடுத்திட முடியுமா? அம்மா, இந்தா பாரு நா சொல்றேன், பணக்கார வீட்டுல இருக்கிற இரும்புப் பெட்டியைத் திறப்பதற்குத்தான் சாவி கெடைக்கும். அவங்க இருதயத்தைத் திறப்பதற்கு சாவியே கெடைக்காது.



கோமதி : அவசரப்பட்டா முடியுமா? தாத்தா மனசு தங்கம்.

குமாரு: அந்தத் தங்கத்துல கொஞ்சம் கிள்ளி, ஆலைத் தொழிலாளிகளுக்கு ஆளுக்குக் கொஞ்சமா கொடுக்கச் சொல்லேன்.

கோமதி : தங்கத்த கிள்ள முடியுமா? உருக்கணும். என்று சொல்கிறாள்.

குமார் நல்லையா முதலாளியின் வாரிசாக மாறிய பிறகு ஆலையின் மானேஜர் கழுகாசலத்தின் சதித்திட்டத்தால் குமார் மனநலக் காப்பகத்தில் அடைக்கப்படுகிறான். அங்கும் மிகச் சிறப்பான உரையாடலை நிகழ்த்தி இருப்பார் கலைஞர்.

இறுதிக் காட்சியில் குமாரை மக்கள் கல்லால் அடித்து விரட்டுகின்றனர். கல்லடிபட்டு குழந்தை செண்பகம் இறந்து போக குமார் துப்பாக்கியால் மக்களைச் சுட முற்படுகிறான். அப்போது காவல்துறை வந்து கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துகின்றனர் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் குமார் பேசுகிறான்.....

### அனல் தெறிக்கும் நீதிமன்றம்

குமார்: நிரபராதிகளைத் தண்டிக்கவும் குற்றவாளிகளை விடுவிக்கவும் வாதாடுகின்ற வழக்கறிஞர்கள் சிலர். நியாயம் ஒன்றுக்காகவே போராடுகின்ற வழக்கறிஞர்கள் சிலர். இரு சாராருக்கும் அபயமளித்துக் காக்கின்ற சட்டப்புத்தகங்கள் இவை. சத்தியத்தையும் அசத்தியத்தையும் சந்திக்கின்ற சாட்சிக் கூண்டு.

அதோ அக்கிரமத்தின் மொத்த வியாபாரி கழுகாசலம். ஆசைக்கோர் அளவில்லா அபையம்மா, ஆருயிர் கோமதி, அன்புக் குழந்தைகள் இவ்வளவும் எனக்குத் தெளிவாகத் தெரிகின்றன. கணம் நீதிபதி அவர்களே, இப்போது சொல்லுங்கள் நான் எப்படிப் பைத்தியக்காரனாக இருக்க முடியும்? என உரையாடல் நீளும்.

அந்த காட்சியில் சாட்சிகளாகப் பலர் விசாரிக்கப்படுவார்கள்.

மில் தொழிலாளி முருகன்: அது வந்து ஆளு சரியான பைத்தியம்னு நினைச்சோம்

வழக்கறிஞர்: ஏன் அப்படி நினைச்சீங்க?

மில் தொழிலாளி முருகன் : அப்புறம் என்னங்க? மில்லுல வர்ற லாபத்துல தொழிலாளிங்களுக்கு சம பங்கு கொடுக்கப்போறேன்னு சட்டம் போட்டாரு. இந்த நாட்டுல பைத்தியக்காரன் தவிர வேற எந்த முதலாளியும் அப்படிச் செய்ய மாட்டாங்க.

குமார்: அண்ணே, என்னப் பாருங்க, நல்லாப் பாருங்க, அழகிரி டீ கடை வச்சிருந்தேனே அந்தக் குமாரு நானு. இப்பச் சொல்லுங்கண்ணே? நான் பைத்தியமா?

> ஏமாற்றக் கற்றவர் ஏமாறி இளைத்தவர் இவர்களுக்கு மத்தியில் கொள்கைச் சிங்கங்கள், கொடுமை கண்டு அஞ்சாத லட்சியத் தங்கங்கள் அத்தனைபேருமே பைத்தியக்காரர்கள் என்றால் நான் பைத்தியக்காரன் தான்.

தொழிலாளி முருகன் : ஆமா, டீ கடை வச்சிருக்கும் போதே லேசா கொஞ்சம் கிறுக்குதான். 'பசிக்கும்போது சாப்பிடுங்க, பணம் இருக்கும் போது கொடுங்கன்னு' சொல்லி ஒளறிக்கிட்டே இருப்பியே

குமார்: இது உளறலா? அடப் பைத்தியக்கார உலகமே!

அடுத்துப் பிச்சைக்காரன் பெருமாள் விசாரிக்கப்படுகிறான். வழக்கறிஞரிடம்,

பிச்சைக்காரன் பெருமாள்: பைத்தியக்கார மனுசன் நூறு ரூபாய விட்டெறிஞ்சாரு சாமி.

குமார்: ஏம்பா, உன் வறுமையைப் பார்த்து நூறு ரூபா கொடுத்தா நான் பைத்தியக் காரனா?

பிச்சைக்காரன் பெருமாள் : பின்னே என்ன? ஆயிரம் இரண்டாயிரம்னு சாமி உண்டியல்ல போயி போடுறாங்க. நாங்க அம்மா தாயேன்னு கதறுறோம் ஒரு அம்மங்காசு கொடுக்கறது இல்ல.

அய்யா திடீர்னு நூறு ரூபாய எடுத்துக் கொடுத்தார்னா மூளைக் கோளாறுன்னு தான சொல்லணும் ? எம் பொஞ்சாதி கூட அப்படித்தான் சொன்னா ?

குமார்: ம், இப்பொழுதான் எனக்குப் பைத்தியமே பிடிக்கிறது.

டவாலி: சத்திரத்து கந்தன்..... சத்திரத்து கந்தன்.....

### சாட்சிகள் வேண்டாம்

குமார்: வேண்டாம் ..... வேண்டாம்.... கடுமையான மழை, கொடுமையான குளிர் சத்திரத்தில் படுத்துக் கிடந்த கந்தனுக்கு என் உடைகளை எல்லாம் கழட்டிக் கொடுத்தேன். அது பைத்தியக்காரத்தனமான செயலென்று இப்போது கந்தன் சாட்சி சொல்லப் போகிறான். நீதிபதி அவர்களே வேண்டாம், சாட்சிகள் போதும். நான் பைத்தியம் என்பதற்கு இதுவரை சொன்ன சாட்சிகளே போதும். உங்களுக்குக் குழப்பமில்லாமல் நானே ஒப்புக் கொள்கிறேன். நான் பைத்தியக்காரன் தான். சாட்சிகள் எல்லாம் சரியாகவே சொன்னார்கள். நான் பைத்தியக்காரன் தான்.

கதியில்லையே, வாழ வழியில்லையே எனக் கதறியழும் கபோதிகளிடம் கருணை காட்ட மனமின்றி, காசு பணம் சேர்த்து வைக்கும் கெட்டிக்காரர்கள் மத்தியில் பணத்தின் அருமை தெரியாமல் வாரி வழங்குபவன் பைத்தியக்காரன்தான். ஆலையிட்ட கரும்பாக அவதியுறும் தொழிலாளர்களின் ரத்தச் சாறு பிழிந்து நித்தம் கொழுக்கின்ற முதலாளிகளுக்கிடையில் சமதர்மம், சமத்துவம் என்றெல்லாம் கூச்சல் போடுபவன் ஒரு பைத்தியக்காரன்தான். மானம் இழந்திடினும், மாசு வந்து சூழ்ந்திடினும் மாளிகை வாசம், மைனர்கள் நேசம் இருந்தால் போதும் என்று கூறிகின்ற கணிகையர் மத்தியிலே கற்புநெறி உரைப்பவன் ஒரு பைத்தியக்காரன்தான்.

உண்ணச் சோறிடார், உழைத்தும் கூலி கொடார் வண்ணத் தமிழ்மொழி அழிப்போர், வளமொழி வாழாது கெடுப்போர் ஏமாற்றக் கற்றவர் ஏமாறி இளைத்தவர் இவர்களுக்கு மத்தியில் கொள்கைச் சிங்கங்கள், கொடுமை கண்டு அஞ்சாத லட்சியத் தங்கங்கள் அத்தனைபேருமே பைத்தியக் காரர்கள் என்றால் நான் பைத்தியக்காரன் தான்.

என அனல் தெறிக்கும் வசனங்கள் 15 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கும் . அன்றைய சமூகத்தின் அடித்தட்டில் வாழும் ஏழைகளின் முட்டாள்தனத்தின் மீதான கேலியும், கிண்டலும், வருத்தமும் அதே சமயம் ஏமாற்றுப் பேர்வழிகள் மீது கூர்மையான விமர்சனமும் நெருப்புத்துண்டுகளாக வந்து விழும். நீதிமன்ற காட்சியில் கொள்கையை நுணுக்கமாகப் புகுத்தி வசனம் எழுதுவதில் கலைஞரை மிஞ்ச இன்னொருவர் பிறக்க வில்லை என்பதற்கு அவன் பித்தனா திரைப்படமும் உதாரணமாக அமைந்துள்ளது..

...காட்சி விரியும்

## அறிவுத் திருவிழாவின் இறுதி நாள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா நிறைவையொட்டி இளைஞர் அணியின் சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில், ‘காலத்தின் நிறம் கருப்பு – சிவப்பு’ நூல் வெளியீடு, இருவண்ணக் கொடிக்கு வயது 75 இரண்டு நாள் கருத்தரங்கம், முற்போக்கு புத்தகக் காட்சியுடன் நவம்பர் எட்டாம் தேதி அறிவுத் திருவிழா தொடங்கியது.

இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் பெரியாரிய– அம்பேத்கரிய– மார்க்சிய பதிப்பாளர்கள் மற்றும் நூல் விற்பனையாளர்களை மட்டும் கொண்டு நடைபெறும் புதுமையான இப்புத்தகக் காட்சி அரசியல் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு, புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு நூல்களை வாங்கிச் சென்றுள்ளனர்.

இப்புதுமையான முயற்சி தொடர வேண்டுமென்று நூற்றுக்கணக்கானோர் தங்கள் சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டுள்ளனர்.

முற்போக்கு புத்தகக் காட்சியை ஒட்டி, மாலை நேரங்களில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளையும், கருத்தாளர்கள் உரையையும் காண பொதுமக்கள் தன்னெழுச்சியாக பெரும் ஆர்வத்துடன் கூடுகின்றனர். 10% தள்ளுபடி விலையில் முற்போக்கு நூல்களை தேடி அலையாமல் ஒரே இடத்தில் வாங்கும் வாய்ப்பும், கலைநிகழ்ச்சிகளும் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அந்த வகையில் கடந்த எட்டு நாட்களாக கோலாகலமாக நடைபெற்று வந்த சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி–2025 இன்றுடன் நிறைவு பெறுகிறது.

இன்று மாலை 5.00 மணிக்கு மாற்று ஊடக மையம் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சிகளும், ‘அறிவைக் கொண்டாடுவோம்’ என்ற தலைப்பில் திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்களின் உரைவீச்சும் நடைபெற உள்ளன. இறுதியாக கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை வழங்கவுள்ளார்.

அனைவரும் வாரீர்...

## ஃப்ளாஷ்பேக்



### சைக்கிள் பேரணி, ஆர்ப்பாட்டம்!



ஆ.இரா.அருண்

1986-ஆம் ஆண்டு தமிழக சட்ட மன்றத்தில், கழகத்தின் 10 உறுப்பினர்களை, சபையில் இருந்து நீக்கியது அன்றைய அரசு. அதையடுத்து, சபாநாயகரைக் கண்டித்து அம்பத்தூரில் மாபெரும் கண்டன சைக்கிள் பேரணி நடைபெற்றது. அதில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் தலைமை ஏற்று கலந்து கொண்டார். உடன் அண்ணன் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மிசா பா.இரவைகண்ணன் ஆ.இரா. நாதன் மற்றும் பலர் உள்ளனர்..

– ஆ.இரா.அருண், மாவட்டப் பிரதிநிதி, அம்பத்தூர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### அறிவகம் முகவரியில் ‘ஹோம் லாண்ட்’!

1957-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் காஞ்சிபுரத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ‘ஹோம் லாண்ட்’ இதழ், 1957 -ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இறுதியில் இருந்து சென்னையில் இருந்து வெளிவந்தது. ஆங்கிலத்தில் எட்டு பக்கங்களில் வார ஏடாக வெளியானது ஹோம் லாண்ட். சென்னையில் இருந்து இதழ் வெளி வருமானால், கழக அரசியல் எதிரிகளுக்கு இதழ் உடனே கிடைக்கும் என ‘அறிவகம்’ முகவரியில் இருந்து வெளி வந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131